சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

திரு. பி. வெங்கடசாமி அவர்கள் 1967–1971, 1971–1976 மற்றும் 1996–2001 ஆகிய ஆண்டுகளில் ஓசூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றினார்கள்.

திரு. பா. வேல்துரை அவர்கள் 1996–2001 மற்றும் 2006–2011 ஆகிய ஆண்டுகளில் சேரன்மகாதேவி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றினார்கள்.

திரு. தோப்பூர் திருவேங்கடம் அவர்கள் 1971–1976 ஆம் ஆண்டுகளில் அன்றைய வட ஆற்காடு மாவட்டம், கணியம்பாடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பீடத்தின் நிறுவனர் திரு. பங்காரு அடிகளார் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பீடத்தின் நிறுவனர் திரு. பங்காரு அடிகளார் அவர்கள் 19–10–2023 அன்று தமது 82–வது அகவையில் மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

ஆதிபராசக்தி பீடத்தை நிறுவி, அரை நூற்றாண்டிற்கும் மேலாக ஆன்மிகத் தொண்டாற்றுவதில் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக்கொண்டவர். மேலும், கல்வி, மருத்துவம் உள்ளிட்ட தொண்டு நிறுவனங்களைத் துவங்கி சமூக சேவைகளை வழங்கிய திரு. பங்காரு அடிகளார் அவர்கள் 'பத்மஸ்ரீ' விருது பெற்ற பெருமைக்குரியவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர், பக்தர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

(ஆ) விடுதலைப் போராட்ட வீரர் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் முதுபெரும் தலைவர் திரு. என். சங்கரய்யா அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுவுடைமைப் போராளியும், விடுதலைப் போராட்ட வீரரும், இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் முதுபெரும் தலைவருமான திரு. என். சங்கரய்யா அவர்கள் 15–11–2023 அன்று தமது 102–வது அகவையில் மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

இளம் வயதிலேயே பொது வாழ்க்கையில் ஈடுபட்டு இந்திய நாட்டுக்காகவும், உழைக்கும் வர்க்கத்தினருக்காகவும், தமிழ் மண்ணுக்காகவும் தமது வாழ்க்கையை அர்ப்பணித்த திரு. என். சங்கரய்யா அவர்கள் இந்திய விடுதலைக்கு முன்பே தேசியம் சார்ந்த செயல்பாடுகளால் பலமுறை சிறைக்குச் சென்றவர்.

1967–1971 ஆம் ஆண்டுகளில் மதுரை மேற்கு தொகுதியிலிருந்தும், 1977–1980 மற்றும் 1980–1984 ஆகிய ஆண்டுகளில் மதுரை கிழக்கு தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றியவர். இவரது மகத்தான சேவையைப் பாராட்டி, 2021 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு இவருக்கு 'தகைசால் தமிழர்' விருதை வழங்கி கௌரவித்தது.

அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர், கட்சித் தோழர்கள் உள்ளிட்ட அனைவருக்கும்